உ



அளவெட்டி வடக்கு

# அருள்மிகு ஐயனார் கோவில்

# மகா கும்பாபிஷேக மலர்

2000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அளவெட்டி வடக்கு

# அருள்மிகு ஐயனார் கோவில்

# கும்பாபிஷேக மலர் - 2000

## வரவு செலவு அறிக்கைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# சமர்ப்பணம்

எமது குல தெய்வமாகிய அளவெட்டி, வடக்கு சாத்தாகலட்டி ஸ்ரீ ஐயனார் பெருமானின் திருவருளால் நாங்கள் வேண்டிய செல்வம் அனைத்தையும் பெற்று வாழ்ந்து வருகிறோம். ஐயனார் பெருமானின் திருவருளால், அடியவர்களின் உதவியுடன் 20-03-2000 அன்று மஹாகும்பாபிஷேகம் சிறப்பாக நடந்தேறியது.

இம்மஹாகும்பாபிஷேக நிகழ்ச்சியை நிதர்சனமாக்குவதற்கு வெளிவரும் இம் "மஹா கும்பாபிஷேக மலர்" சிறப்புற ஐயனார் திருவடிகளைப் பிரார்த்தித்து, இம் மஹாகும்பாபிஷேக மலரை பூரணை, புட்கலை சமேத ஐயனார் பெருமானின் பாதாரவிந்தங்களில் காணிக்கையாக சமர்ப்பிக்கின்றோம்.

கி. சி. சிவமயம்

'பிள்ளையார் இல்லம்'
ஐயனார் கோவிலடி,
அளவெட்டி, வடக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மூலமூர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சேதமடைந்த நிலையில்



திருப்பணி வேலைகள் ஆரம்ப நிலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எழுந்தருளி மூர்த்தி



ஆலய முகப்புத் தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தூபி அபிஷேகம்



ஆதிகால மூலஸ்தான கல்முடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# பதிப்புரை

அளவெட்டி வடக்கு சாத்தா கலட்டிப்பதியில் விற்றிருக்கும் அருள்மிகு ஐயனார் ஆலயம் முந்நூறு ஆண்டுகள் பழமை வாய்ந்தது. பூரணை புட்கலை சமேதராக விற்றிருக்கும் ஐயனார், அடியவர்கள் விரும்பிக் கேட்பதை ஈந்து அருள் பாலித்துக் கொண்டிருக்கிறார். இவ்வாண்டு (20-03-2000) நடந்தேறிய குடமுழுக்கு விழாவின் பின் எமதுஊர் மேலும் செழிப்புப் பெற்று விளங்குகின்றது. மலேசியாவில் வசித்து வந்த திரு. S. மாணிக்கம் என்பவர் 1950ஆம் ஆண்டளவில் இவ்விடம் வந்து ஐயனார் அடியார்களின் உதவியுடன் கும்பாபிஷேகம் நடாத்தி வைத்தார். இதன்பின் சுமார் 37 ஆண்டுகளாக கும்பாபிஷேகம் நடைபெறவில்லை. ஆகையால் எனது பொறுப்பில் ஐயனார் அடியவர்களின் உதவியுடன் 08-07-1987ஆம் ஆண்டு ஆலயத்தில கும்பாபிஷேகம் நிறைவேற்றப்பட்டது. கும்பாபிஷேகம் நிறைவேறியபின் காலை மாலை இருநேரப் பூசைகள் சிறப்பாக நடைபெற்று வந்தன. நாட்டில் ஏற்பட்ட போர் நிலைமை காரணமாக மக்கள் இடம்பெயர்ந்து சென்றனர். பின்பு மீண்டும் வந்து குறைந்தளவு மக்களே குடியேறி வாழ்கின்றனர். இந்நிலையில் அளவெட்டியில் உள்ள எல்லா ஆலயங்களும் கும்பாபிஷேகம் நடைபெற்று பூசைகள் நடந்தன. ஐயனார் ஆலயத்தில் மட்டும் பூசைகள் நடைபெறவில்லை. ஆகையால் ஐயனார் அடியவர்கள் பலரின் வேண்டுதலுக்கிணங்க, ஐயனார் திருவருளினால் அளவெட்டி வாழ் ஐயனார் அடியார்களின் உதவியுடனும், வெளி ஊர்களில் இடம்பெயர்ந்து வாழும் ஐயனார் அடியவர்களின் உதவியுடனும், வெளிநாடுகளில் வசிக்கும் ஐயனார் அடியவர்களின் உதவியுடனும் எனது பொறுப்பில் 20-03-2000 அன்று கும்பாபி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஷேகம் நிறைவேறியுள்ளது. இவ்வாலயத்தில் இருமுறை கும்பாபிஷேகம் நிறைவேற்றியமை எனக்கு கிடைத்த ஐயனார் திருவருளாகும்.

ஆலயத்தில் ஐயனார் அடியவர்களின் உதவியுடன் செய்யப்படும் இலட்சார்ச்சனை கும்பாபிஷேகம்போன்ற பொது வைபவங்களுக்கு வரவு, செலவு விபரங்களை அச்சிட்டு வழங்குவது எனது வழக்கம். இம்முறையும் வரவுசெலவு விபரங்களை அச்சிட ஆயத்தமாகும்போது அருட்கவி சீ விநாசித்தம்பி புலவர் ஐயா அவர்கள் "இம்முறை ஐயனாருக்கு கும்பாபிஷேக மலர் வெளி வருதல் வேண்டும். அதில் ஐயனார் ஆலய வரலாறு இடம்பெறுதல் வேண்டும்" என்று என்னிடம் கூறினார். ஐயா அவர்களது ஆலோசனையினாலும் ஐயனாரின் திருவருளினாலும் "இக்கும்பாபிஷேக மலர்" வெளி வருகின்றது. இம்மலரில் கும்பாபிஷேக வரவு, செலவு விபரங்களும் இடம்பெறுகின்றன.

ஆலயத்தின் வரலாறு பற்றிய செய்திகள் மரபு வழியாக செவிவழிக் கதைகளாகவே விளங்குகின்றன. தற்காலத்திலுள்ள இளையவர்களுக்கு ஆலய வரலாறு பற்றிய கதைகள் தெரியாமல் இருக்கின்றன. எனவே அக்கதைகள் எழுத்துருவில் வெளிவருவதன் மூலம் ஆலய வரலாறு பற்றிய கதைகள் பாதுகாக்கப் படுவதுடன் எதிர்கால சந்ததியினர் ஆலய வரலாற்றினை அறிய இம்மலர் உதவுமென நம்புகின்றேன். மேலும் கும்பா பிஷேகத்தின் மகத்துவத்தினையும், அதன் நன்மைகளை யும் மக்கள் அறிவதன் மூலம் அவர்கள் இறைபணியில் ஈடுபட்டு இறைவனின் திருவருளைப் பெற்று ஆன்ம ஈடேற்றத்தினைப் பெறுவர் என்பது எனது திண்ணம்.

மேலும் ஐயனாரது வரலாறு. அவரது அவதா ரங்கள் பற்றிய செய்திகளைக் கூறும் நூல்கள் அரி தாகவே காணப்படுகின்றன. எனவே ஐயனாரின் வரலாறு, அவதாரங்கள் பற்றிய செய்திகளைத்தொகுத் துக் கூறியிருப்பது அனைவரும் படித்துப் பயன்பெறக் கூடியது ஆகும். ஐயனாரின் திருப்பொன்னூஞ்சல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சுப்பதிப்பில் இல்லாதது பெருங்குறையாகவே இது வரை காலமும் இருந்தது. இனி வரும் காலங்களில் ஐயனார் அடியவர்களின் நாவில் திருப்பொன்னூஞ்சல் தவழ்ந்து அவர்கள் ஐயனாரின் திருவருளைப் பெறு வார்கள் என்பதில் ஐயமில்லை. இம்மலரில் இடம் பெறும் அனைத்து விடயங்களும் மக்கள் படித்துப் பயன் பெறக் கூடியன என்பதில் மிகையொன்றுமில்லை.

இம்மலருக்கு ஆசியுரை வழங்கிய கும்பாபிஷேகத்தை நடாத்திய பிரதம குருவும், உரும்பராய் ஞானவைரவர் தேவஸ்தான ஆதீனகர்த்தா சிவஸ்ரீ செல்வ வைரவ நாதக்குருக்கள் அவர்களுக்கும் வாழ்த்துரை வழங்கிய தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கும், அளவெட்டி அருள்மிகு ஐயனார் ஆலய வரலாற்றினை எழுதியும், ஐயனாருக்கு சிறந்த திருப் பொன்னூஞ்சலை ஆக்கியும் தந்த அருட்கவி சீ. விநா சித்தம்பி புலவர் ஐயா அவர்களுக்கும் 'கும்பாபிஷேக மகத்துவம்' பற்றி கட்டுரையினை வரைந்த பண்டிதர் க. நாகலிங்கம் அவர்களுக்கும், ஐயனாரது அவதாரங் களை தொகுத்து எழுதிய திரு. சி. சிவசிவா அவர் களுக்கும் ஐயனாரின் திருவருள் கிடைக்கப் பிரார்த்திக் கின்றேன்.

ஆலய கும்பாபிஷேகம் சிறப்புற உதவிய பூசகர் ஐ. கிருஷ்ணபிள்ளை அவர்களுக்கும், பிரதமகுரு சிவஸ்ரீ செல்வ வைரவநாதக்குருக்கள் அவர்களுக்கும், அவரது உதவியாளர்களுக்கும், மங்கல இசை வாசித்த சி. சிவ மயம் குழுவினருக்கும், கும்பாபிஷேகத்தின் போது மங்கல வாத்தியம் வாசித்த ஏனைய இசைக் கலைஞர் களுக்கும், கட்டடத் திருப்பணி வேலைகளை செவ்வனே செய்து தந்த திரு தெ. குருசுமுத்து அவர்களுக்கும் அவரது உதவியாளர்களுக்கும், ?ச்சுவேலையை சிறப் பாகச் செய்துதந்த திரு. மு. ஐயாத்துரை அவர்களுக் கும், அவரது உதவியாளர்களுக்கும் கட்டடப் பொருட் களை லான்மாஸ்ரர் மூலம் ஏற்றி இறக்கி உதவிய திரு. சி. கந்தசாமி (சொக்கர்) அவர்களுக்கும், ஆலயத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்திருக்கும் பிள்ளையார், முருகன் ஆலய பண்டிகையை சிறப்புற அமைத்துத்தந்த திரு. வை. சொக்கலிங்கம் அவர்களுக்கும், ஆலய சுவர்களுக்கும், பண்டிகைகளுக்கும் அழகுற வர்ணவேலைகளை செய்துதந்த திரு அ. இராஜசேகரம் அவர்களுக்கும், அவரது உதவியாளர்களுக்கும், ஆலய முகப்பு ஐயனார்பட ஓவியத்தை அழகுற வரைந்து தந்த திரு. செ. சிவப்பிரகாசம் ஓவியர் அவர்களுக்கும், கண்டாமணியின் வளையத்தினை சிறப்புற அமைத்துத் தந்த திரு நா. தர்மராசா (பூசகர்) அவர்களுக்கும், ஒலிபெருக்கி சாதனங்களை இயக்கி உதவிய வதனா சவுன்ஸ் கனகராசா அவர்களுக்கும், திருப்பணி வேலைகள் நடைபெறும் போது தொண்டுகள் சில செய்தும், கும்பாபிஷேகத்தின் போது மண்டபங்கள் அமைத்தும், சோடனைகள் செய்தும் தொண்டாற்றிய செல்வன் மு. நிரஞ்சன், செல்வன் தா. நிகேதன், செல்வன் சி. சிவமயம் ஆகியோருக்கும் கும்பாபிஷேகம் சிறப்பாக நிறைவேற நிதிஉதவிகள் வழங்கிய அனைத்து ஐயனார் அடியவர்களுக்கும் ஐயனார் திருவருள் பாலிக்க வேண்டுகின்றேன். அரசடிப் பிள்ளையார், எழுந்தருளி விக்கிரகம், வீரமாகாளர், திருமஞ்சனக்கிணறு, குதிரைவாகனம், ஆலயமுன்சுவர் ஆகிய அரும்பெரும் திருபபணி வேலைகளை தனது சொந்தச் செலவில் செய்த அமரர் திரு இ. சுப்பிரமணியம் (காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை) அவர்களை நாம என்றும் மறக்க முடியாத ஒருவர். அவர்களுக்கும் ஐயனார் கிருபை கிடைக்க பிரார்த்திக்கின்றேன். வரவு, செலவு கணக்குகளை ஆய்வு செய்து உதவிய ஆசிரியர் பா. தர்மசீலன் அவர்களுக்கும் ஐயனார் திருவருள் கிடைக்க வேண்டுகின்றேன். மேலும் இம்மலரினை அழகுற அச்சிட்டு உதவிய 'திருமகள் அழுத்தகத்தினருக்கும்' ஐயனார் திருவருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

"பிள்ளையார் இல்லம்" திருப்பணிநிதி, விழாப்பொறுப்பாளர்
ஐயனார் கோவிலடி, **திரு. கி. சிவபாதரத்தினம்**
அளவெட்டி வடக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

யாழ்ப்பாணக் குடாநாட்டில் அளவெட்டி என்னும் சாத்தா கலட்டி ஊரில் பூரண புஷ்கலாம்பிகா சமேத ஸ்ரீ ஹரிஹர புத்திர கோயில் கொண்டெழுந்தருளி விரும்பித்தொழும் அடியார்களின் வினைகளை அறுத்து காவல் தெய்வமாக வீற்றிருப்பதில் மிகை யொன்றுமில்லை.

வெறுமனே கல்லாகவும், செம்பாகவும் உள்ள திருவுருவங் களே என்று சிந்தையால் எண்ணாது ஜோதி வடிவான உருவங் களே அவை என்னும் எண்ணத்தை சிந்தையிலே நிலை நிறுத்தி னால் ஆன்மாக்களாகிய நாம் பெறும் நன்மைகள் அநந்தம். இவ்வாறாக கிரியா வழியில் உருவ வழிபாட்டுச் சிறப்பைக்காட்டும் உன்னத விழாவே கும்பாபிஷேகம் ஆகும்.

ஆலயம் ஒரு பசு. கர்ப்பக்கிருகம் பாலாமிருதம் இருக்குமிடம். இறைவன் திருவுருவம் நாம் பாலைப் பெற்றுக்கொள்ளும் அவயம். பாலமிர்தம் உடலுக்கு நன்மை செய்யும். இறைவன் திருவருள் உயிருக்கு நன்மை செய்யும். வேண்டுவார் வேண்டுவதை அவர வர் பக்குவத்திற்கேற்ப திருவருள் புரியும் இறைவன் ஸ்ரீ ஹரிஹர புத்திரர் வடிவில் வீற்றிருந்து திருவருள் பாலிக்கின்றார்.

இக் கும்பாபிஷேகத்தில் அடியேன் பிரதமகுருவாக இருந்ததை எண்ணி பெருமையுறும் அதே நேரத்தில் கும்பாபிஷேகம் சிறப்புற நிறைவேற உதவிய அனைவருக்கும் பூரண, புஷ்கலாதேவி சமேத ஹரிஹர புத்திரர் திருவருள் பாலிக்க பிரார்த்தித்து இக் கும்பா பிஷேக மலர் சிறப்புற வெளிவர எனது நல்லாசிகளைக் கூறு கின்றேன்.

**செல்வரத்தினக் குருக்கள், வைரவநாதக் குருக்கள்**
ஞானவைரவ கோவில் தேவஸ்தானம்.

உரும்பராய் கிழக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பணியின் சிறப்பு

" சிவபுரத்தை சிறக்கச் செய்தார் இனிப் பிறவியை எய்த மாட்டார் " என்பது ஆன்றோரின் வாக்கு. அளவெட்டி வடக்கில் கோயில்கொண்டு எழுந்தருளி இருக்கும் ஐயனார் பெருமானுக்குத் திருப்பணிகள் செய்யப் படுகின்றன என்பதை மிக மகிழ்ச்சியுடன் கேட்டறிந்தோம். கலியுகத்திலே கண்கண்ட தெய்வமாகப் போற்றப்படுகின்ற சிறப்பு ஐயனார் பெருமானுக்கும் உண்டு. இறைவன் சிவனாகவும், மகாவிஷ்ணு சக்தியாகவும் இணைந்து தோற்றுவிக்கப்பட்டவரே ஐயனார். இவருடைய அற்புதங்களையும், வழிபடுவோருக்கு உதவும் மாண்பினையும் கந்தபுராணம் போன்ற நூல்களிலே நாம் படித்து அறிகின்றோம். ஓலமிட்டு அழைத்த பொழுது இந்திராணியை அரக்கர் கொடுமையிலிருந்தும் காப்பாற்றியவர் ஐயனார்.

இத்தகைய அருட்பிரவாகம் நிறைந்த ஐயனார் பெருமானுக்கு அளவெட்டி வடக்கில் ஒரு ஆலயம் அமைக்கப் பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. தவில் வித்துவான் திரு. கி. சிவபாதரத்தினமும் அவருடைய பிள்ளைகளும் இந்த தெய்வீக முயற்சியில் ஈடுபட்டிருப்பது குறித்து நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். இத்திருப்பணி குறித்து எமது வாழ்த்தையும் தெரிவித்து அமைகின்றேன்.

கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
சமாதான நீதிபதி,
தலைவர்.
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை, ஸ்ரீலங்கா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# அளவெட்டி வடக்கு சாத்தாகலட்டி ஐயனார் ஆலய வரலாறு

மூவுலகும் சீர்பொலிய முகுந்தன்சிவன் மகனாய்
நாவலந் தீவருகில் நயந்துதித்த ஐயனார்
வாவிவயல் சூழளவை வந்துவீற் றிருந்தான்
பூவடிகள் சென்னிமிசை புனைந்துகை தொழுவாம்

அளவெட்டி வடக்கு கலைநலம் செழித்த பகுதி. சுமார் முந்நூறு ஆண்டுகளுக்குமுன் அன்பர் ஒருவர் குடியிருப்புக்கள் செறிவற்ற பனை மரத்தோப்பிலே ஒரு குடிசை கட்டி வாழ்ந்து வந்தார். பற்றைகளும், கல்லுநிலமும் ஆகிய இடத்திலே தான் இவரது குடிசையமைந்திருந்தது. விஷப்பாம்புகளும், பயங்கரப் பிராணிகளும் இவரது குடிசையைச் சுற்றி வாழ்ந்து வந்தன. அல்லும் பகலும் விநாயகர், வைரவர், அம்பாள் முருகன் இவர்களை வழிபட்டு நித்திரை செய்வார்கள்.

ஒரு தினம் அளவெட்டியின் வடக்கே சென்று திரும்பும் போது கடும் இருள் சூழ்ந்தது. பாதை தெரியவில்லை. இறைவனை நினைந்து பாடிப்பாடி வீடுவந்து சேர்ந்தார். அன்றிரவு கனவில் தோன்றி "நீ பயப்பட்டு வரும்போது உனக்குக் காவலாக யான் வந்தேன். என் பெயர் ஐயனார். சாத்தா என்றும் என்னை அழைப்பர். ஆகையால் என்னை உனது குடிசையின் வடமேற்குத் திசையில் பனந்தோப்பில் ஒரு பனையில் ஆலமரம் பற்றி வளர்ந்திருக்கிறது. அந்தப் பனையடியில் ஒரு கல்லை வைத்து என்னை நினைத்து வழிபாடு செய்" என்று மொழிந்தபடி, அந்த அன்பர் அப்படியே வழிபட்டார். அதனாலே அக்கோவிற்குறிச்சி சாத்தாகலட்டி எனப் பெயர் பெற்றது.

ஒரு தருணம் அக்குறிச்சியில் வாழும் பெண்ணொருத்தி ஆசாரமில்லாமல் ஐயனார் இருக்கும் பனையின் பழத்தை எடுத்துச் சென்றாள். அன்றிரவு அவளைப் பய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறுத்தி இனிமேல் நீ அங்கு பனம்பழமெடுக்க வரக் கூடாது எனக் கட்டளையிட்டார். அதிகாலையிலே பனையிலிருந்த எல்லாப் பழங்களும் கீழே விழுந்து கிடந்தன. அதன் பின்னர் அப்பனை ஆண்பனையாகப் பாளை விட்டுக் காயாமல் விளங்கியது.

பிற்காலம் அமரர் சின்னத்துரை என்பாரும் சந்ததி யினரும் தற்போது விளங்கும் ஆலயத்தைக் கட்டியதாக அறிகிறோம். சிவஸ்ரீ ஐயம்பிள்ளை ஐயரின் சந்ததி யினர் பரம்பரையாகப் பூசையாற்றி வருகின்றனர்

தர்ம சாத்தாவாகிய ஐயனார் வருமடியார்களுக்கு உயிர்ச்சேதம் ஏற்படாமல் நோய் தீர்த்து மலடு நீக்கி வேண்டிய வரங்கொடுத்து மங்களக்கோயிலில் மகிழ்ந் திருந்து காட்சி தருகிறார். அன்படியார்கள், ஒன்று கூடி 2000 ஆம் ஆண்டு எம்பெருமானுக்குக் கும்பாபி ஷேகம் செய்தனர். ஐயனார் அருளால் அவரடியார்கள் எல்லாம்

"வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

என்ற கச்சியப்பரின் வாக்குக்கமைய வாழ்வார்களாக எனப் பிரார்த்திக்கின்றேன்.

சுபம்

அன்பன்

அருட்கவி சீ. விநாசித்தம்பிப்புலவர்

நாகேஸ்வரம், அளவெட்டி.
01-01-2001

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கும்பாபிஷேக மகத்துவம்

சைவ ஆலயங்கள் சிவாகம விதிப்படியே நடைபெற வேண்டுமென்பது சைவச் சான்றோர் கொள்கையாகும். ஆலயத்தை நிர்மாணிப்பது, நித்திய நைமித்திய பூசைகளை நிகழ்த்துவது ஆகிய அனைத்தும் ஆகமங்கள் விதித்த வாற்றால் நடைபெறா விட்டால் ஆலயங்கள் மூர்த்தி விஷேடம் சிதைந்து நற்பலன்கள் எட்டாது போகும். ஆலயங்களின் அமைப்பு முறை பற்றியும், வழிபாட்டு முறைகள் பற்றியும், ஆகமங்கள் விரிவாகப் பேசுகின்றன. ஆலயத்திற் பூசையை நிகழ்த்தும் ஆசாரியாருக்கு இருக்க வேண்டிய தகைமைகள் பற்றியும் நூல்கள் விரித்துப் பேசுகின்றன. ஆலயத்தில் பூசையை மேற்கொள்ளும் பூசகர் தெய்வ நம்பிக்கையற்றவராயும் வயிற்றுப் பிழைப்பை எதிர்பார்த்தே பூசை செய்பவராயும் இருப்பின் அவர் மட்டுமல்லாமல் அவரிடந் தேவப் பிரசாதங்களைப் பெறுபவர் கூட நற்பயனை எய்த முடியாது. மந்திரங்கள் நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்தனவென்பர் தொல்காப்பியர். அவை தமிழ் மொழியிலும் இருக்கலாம், வடமொழியிலும் இருக்கலாம். வடமொழி மந்திரங்களை அம்மொழியறிவும், எழுத்துக்களை அட்சர சுத்தியுடன் ஓதும் ஆற்றலும் உடையவரே சரியாக உச்சரிக்க முடியும். தமிழ் மொழியில் வடமொழி மந்திரங்களை எழுதி அவற்றை உச்சரிப்பதில் பெருந்தவறுண்டு. வடமொழி எழுத்துக்கள் உதாத்தம், அநுதாத்தம், சுவரிதம் எனப்படும். எடுத்தல். படுத்தல், நலிதலாகிய ஒலிவேறுபாடுடையவை இவ் வேறுபாடுணராதார் வடமொழி மந்திரங்களை ஓதின் அவை நற்பலன் தரமாட்டா வென்பது ஒருதலை.

ஆகம முறைப்படி பரிபாலிக்கப்படும் ஆலயங்களிற் கூட கும்பாபிஷேகம் எனப்படுங் குடமுழுக்குப் பெருவிழா காலத்துக்குக் காலம் நடைபெறுவது இன்றியமையாதது. ஆலயக் கட்டடங்கள் சிதைவுற்று அவை புனருத்தாரணஞ் செய்யப்பட்ட வேளையும் ஏதாவது அநர்த்

தங்கள் நடைபெற்று நீண்டகாலம் நித்திய நைமித்தியங்கள் தடைப்பட்டிருந்து அவை மீண்டும் ஆரம்பிக்கப்படும்போதும், பல ஆண்டுகளாகக் கும்பாபிஷேகம் நடைபெறாதிருந்த போதும் கும்பாபிஷேகஞ் செய்து அடியார் நலனையும், நாட்டு நலனையும் பேணுவது அவசியம். மண்டபம், கோபுரம், பரிவாரக் கோவில்கள், வழிபாட்டிற்குரிய விக்கிரகங்கள் என்பன பழுது பட்டிருப்பின் அவற்றை மீளப் புனருத்தாரணஞ் செய்துகொள்ளும் போது மூலமூர்த்தியைத் தற்காலிகமாக வேறிடத்தில் அமர்த்துவதாகிய பாலஸ்தாபனம் செய்தே நேர்ந்த குறைகளை நிறைவு செய்தல் வேண்டும்.

கும்பாபிஷேகம் ஆகம முறைப்படி செய்யப்பட வேண்டியதென்பதைக் கூறத் தேவையில்லை. கும்பாபிஷேகம் நிறைவேறிய பின் கும்பாபிஷேகப் பலனை அடைவதற்காகச் செய்யப்படுவது மண்டலாபிஷேகமாகும். ஒரு மண்டலமென்பது நாற்பத்தெட்டு அல்லது நாற்பத்தைந்து நாள்கள் கொண்டதாகும். இவ்வளவு காலம் மண்டலாபிஷேகம் செய்ய வசதியற்ற ஆலயங்களுக்குப் புறநடைகளுள. இருபத்து நான்கு நாள்கள், பதினைந்து நாள்கள், பன்னிரண்டு நாள்கள், பத்து நாள்கள் என ஆலய பரிபாலகர்கள் வசதிக்கும் வளத்திற்கும் ஏற்றவகையில் மண்டலாபிஷேகத்தை நடத்தலாமென நூல்கள் கூறும்.

கும்பாபிஷேகம் மகிமை சான்றது. அதன் பயன்பாடு, மூலமூர்த்தியின் அருட்பெருக்கு மேலோங்கச் செய்வது. ஆதலால் ஆலய பரிபாலகர்கள் கும்பாபிஷேகம் செய்ய வேண்டிய காலங்களில் செய்ய வேண்டிய முறைப்படி நடாத்தி உலகம் உய்யவும் அடியார் ஈடேறவும் வழிகாண்பார்களாக.

அளவெட்டி, வடக்கு,
அளவெட்டி.

பண்டிதர் க. நாகலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# ஐயனாரின் வரலாறு

முன்னொரு காலத்திலே திருமால் முதலிய தேவர்களும், அசுரர்களும் அமுதம் பெற வேண்டிச் சிவபெருமான் திருவருளால் திருப்பாற்கடலைக் கடைந்தனர். திருப்பாற்கடலில் அமுதகலசம் தோன்றிற்று. அதைக் கண்ட தேவர்களும், அசுரர்களும் தனித்தனியே ''இது எங்கள் முயற்சியால் வந்தது ஆதலால் எங்களுக்கே உரியது'' என்று கூறித் தங்களுக்குள் சண்டையிடமுற்பட்டனர். அதனைக் கண்ட திருமால் பிணக்கை ஒழிக்கவும் தேவர்களே சாவா மருந்தாகிய அமுதத்தை உண்டு இறவாமல் வாழவும் விரும்பி மூவுலகத்தாரும் மையல் கொள்ளும் மோகினி வடிவத்தை எடுத்தார். அம் மோகினியின் அழகைக் கண்ட அவுணர்கள், அமுதத்தைப் பெற விரும்பும் முயற்சியைக் கைவிட்டு ஆசை மேலிட்டுக்கொண்டு மோகினியைச் சுற்றிவர முற்பட்டனர்.

மோகினி வடிவம் கொண்ட திருமால் தன்னைச் சுற்றிவரும் அசுரர்களை நோக்கி உங்களுள் சிறந்த வீரன் எவனோ அவனே என்னை அடைவதற்கு உரியவன் என்றார். அசுரர்கள் அனைவரும் நானே வலியவன் என்று கூறித் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டு இறந்தனர். இராகு கேதுக்களாகிய அசுரர் இருவர் மட்டும் தேவர்களோடு கூடிக் கள்ளத்தனமாக அமுதமுண்டு திருமாலால் தலை துணிக்கப்பட்டுக் கரும்பாம்பு, செம்பாகி அமுதமுண்ட மகிமையால் ஒன்பது கிரகங்களில் இருவராக எண்ணப்படும் பெருமையைப் பெற்றனர்.

### சிவபிரானும் மோகினியும்:

தேவர்களுக்கு அமுதமளித்தபின் திருமால் மோகினி வடிவோடு திருப்பாற் கடலின் கரையில் அமர்ந்திருந்தார். சிவபெருமான் தமது நால்வகைச் சக்திகளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமாலும் ஒருவர் என்பதை அறிவித்தருளும் பொருட்டு அழகிய திருவுருவோடு அங்கு வந்தார். மோகினியைக் கண்டு காதல் கொண்டார், மோகினியும் சிவபிரானிடம் காதல் கொண்டார். சிவபெருமான் மோகினியைத் தழுவ வந்தார். அப்போது திருமால், நான் ஆடவன்; அடியேனைத் தாங்கள் வந்து கூடுதல் முறையோ என்று கூறினார். பெருமான் திருமாலை நோக்கி "நமது சக்தி நான்கு வகையான பெயர்களோடு இலங்குவாள். எனக்கு மனைவியாகும் போது பவானி என்றும், கோபம் கொண்டபோது காளி என்றும், போர் செய்யும் போது துர்க்கையென்றும், ஆணுருவடையும் போது திருமால் என்றும் பெயர் பெறுவாள். ஆதலின் நீ எமக்குச் சக்தியேயாவாய்'' என்று கூறினார். நாம் முன்பு தாருகாவனத்திற்குப் பிக்ஷாடனராய்ச் சென்ற போது நீயும் மோகினி வடிவந்தாங்கி வந்து நம்மைக் கூடிப் பிரமனைப் பெற்றாயல்லவா ? இன்றும் அது போல் உன்னைக்கூட வந்துள்ளோம் எனக் கூறி மோகினியின் கரத்தைப் பற்றினார் மோகினியும் உடன் பட்டார். நாவலத்தீவில் தேங்கு மரத்தடியில் இருவரும் கூடி இன்புற்றனர்.

**ஹரிகரபுத்திரர் :**

சிவபெருமானும் திருமாலும் இவ்வாறு கூடிய காலத்தில் கருங்கடல் போன்ற மேனியும், செவ்வானம் போன்ற சடையும், செண்டாயுதம் ஏந்திய திருக்கரமும், போற்றுதற்குரிய வீரமும் கொண்டவராய் ஞானியர் போற்றும் பெருமையும் நன்மையே புரியும் கருணையும் உடைய ஐயனார் திருவவதாரம் செய்தார். சிவபெருமான் அவருக்கு ஹரிஹரபுத்திரர் எனத் திருப்பெயர் சூட்டினார். பல வரங்களையும் தந்தார். உருத்திரர்களுள் ஒருவராக்கினார். ஒரு புவனத்தைக் கொடுத்து தேவர்களும், முனிவர்களும் வணங்கும் தலைமையை அளித்து அவரைப் புவனத் தலைவராக்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகங்கள் அனைத்தையும் காத்துக்கொண்டிருக்கும் பெருவரம் அளித்தார். ஐயனார் சிவகுமாரர்களில் விநாயகர், முருகன் ஆகியோரின் இளவலாகும் பெருமையைப் பெற்று, சிவபெருமான் ஆணைப்படி தம் கடமைகளைச் செய்து கொண்டு விளங்கி வருகின்றார் என்பது கந்தபுராணத்தில் காணப்படும் ஐயனார் திருவவதார வரலாறாகும்.

**பூரணை, புட்கலை சமேத ஐயனார்:**

ஐயனாருக்கு இரு மனைவியர். ஐயனாரின் இடது புறமிருக்கும் அம்பிகை புட்கலை. இவ்வம்பிகை கரிய திருமேனி உடையவள். வலது கையில் மலரையும் இடது கையில் வரமுத்திரையையும் தரித்தவள். இடது காலை தொங்கவிட்டு வலதுகாலை மடக்கியும் இருப்பவள். ஐயனாரின் வலது புறமிருக்கும் அம்பிகை பூரணை. இவள் பொன்னிறம் கொண்டவள் இடது கையில் குவளை மலரை ஏந்தியவள். வலது கையை தொங்கவிட்டிருப்பாள். இடது காலை மடக்கியும் வலது காலை தொங்கவிட்டுமிருப்பவள். ஐயனாருடைய பரிவாரங்களாவன: மகாகாளன், கோப்தா, பிங்களாஷன், வீரசேனன், சாம்பவன், திரிநேந்திரன், சூலி, தக்ஷன், பீமரூபன் முதலியோராவர். ஐயனாரின் வாகனங்களாவன, குதிரை, யானை என்பன. ஐயனாருடைய கொடிகளாவன, யானைக்கொடி, கோழிக் கொடி என்பனவாகும். ஐயனாருக்கு சாஸ்தா, கையனார், காரி, சாதவாகனன், கோழிக்கொடியோன், சாத்தன், வெள்ளை யானை வாகனன், என்ற நாமங்களும் உண்டு.

**பூரணை புட்கலை திருமணம்**

**புட்கலையை ஐயனார் மணந்த வரலாறு:**

நேபாள நாட்டில் பலஞன் என்றொரு மன்னன் இருந்தான். அவன் மந்திர தந்திரங்களில் வல்லவன். காளி தேவியிடம் பக்தி கொண்டவன். காளிதேவிக்கு ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னியை அர்ப்பணித்தால் மூப்பின்றி வாழலாம் என்று சிலர் கூறக்கேட்டு ஒரு பெண்ணைக் காளி கோவிலுக்குக் கொண்டு சென்றான். அம்மன்னன் கொண்டு வந்தபெண் சிவபக்தி பூண்டவள். தனக்கு வரும் இடையூற்றிலிருந்து காத்தருளுமாறு சிவபெருமானை வேண்டினாள். சிவபெருமான் ஐயனாரை அனுப்பி அப்பெண்ணைக் காக்குமாறு செய்தார். பலஞன் ஐயனாரின் பேரழகில் ஈடுபட்டு அவரைத் தன் மருமகனாக அடைய விரும்பினான். தன் மகள் புட்கலையை மணம் புரிந்து கொள்ளுமாறு வேண்டினான். ஐயனாரும் அதற்கிசைந்து புட்கலையை மணந்து 'புட்கலாபதி' என்ற பெயரைப் பெற்றார்.

## பூரணையை ஐயனார் மணந்த வரலாறு :

வஞ்சி மாநகரில் பிஞ்ஞகன் என்றொரு மன்னன் இருந்தான். அவன் ஒரு நாள் காட்டிற்குள் வேட்டையாடச் சென்றான். இரவுநேரம் மன்னனுக்குத் திசை தெரியவில்லை. இரவில் பூதகணங்கள் கானகம் வந்தன. அரசனைக் கண்டு அவனைக் கொல்வதற்கு நெருங்கி வந்தன. பிஞ்ஞகன் ஐயனாரை வேண்டினான். ஐயனார் மன்னன் முன் தோன்றினார். பூதகணங்கள் அஞ்சி ஓடின. ஐயனாரின் அழகில் ஈடுபட்ட பிஞ்ஞகன் தன் புதல்வியை மனைவியாக ஏற்றுக் கொள்ள வேண்டினான். ஐயனாரும் அதற்கிசைந்து பூரணையை மணந்து 'பூரணாதிபதி' யானார்

## பத்ம புராணத்தில் ஐயனார் :

பஸ்மாசுரன் என்பவன் சிவபெருமானைக் குறித்து தவஞ்செய்து யார் தலையில் கை வைக்கின்றேனோ அவர் உடனே பஸ்மமாக வேண்டும் என்ற வரத்தைப் பெற்றான். தான் பெற்ற வரம் சரியானதுதானா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்பி பஸ்மாசுரன் வரமளித்த சிவபெருமான் தலையில் கை வைக்க ஓடினான். சிவபெருமான் அஞ்சியது போல மறைந்தார். ஐவேலிக் காய் என்ற சிவலிங்கக் காயில் மறைந்திருந்தார் என்றும் சிலர் கூறுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரம்பெற்ற பஸ்மாசுரன் உலகையே அழிக்க முற்பட்டான். திருமால் பஸ்மாசுரனின் செய்கையை அறிந்தார். மோகினி வடிவோடு சென்று அவனை அணுகினார். பஸ்மாசுரன் மோகினியிடம் மயங்கினான். தான் பெற்ற பெருவரத்தை மோகினியிடம் தெரிவித்தான். திருமால் பஸ்மாசுரனை நோக்கி, வரம் பெற்றால் மட்டும் போதுமா? வரத்தைப் பயன்படுத்துவதற்கு உரிய மந்திரத்தைச் சொல்லுமுன் கரநியாசம், அங்கநியாசம் செய்ய வேண்டாமா? என்றார். பஸ்மாசுரனும் அவ்வாறே அங்கநியாசம் செய்ய முற்பட்டு '' சிரசேசுவாகா '' என்று கூறித் தன் கையைத் தானே தன் தலையில் வைத்துக் கொண்டு பஸ்மமானான். மோகினி தன்னை அடைய வேண்டுமானால் எண்ணெய் தேய்த்துக் குளித்துவா என்று கூறியதாகவும் பஸ்மாசுரன் தலையில் எண்ணெய் தேய்ப்பதற்காக கையை வைக்கும் போது அழிந்ததாகவும் கூறுவது உண்டு. பஸ்மாசுரன் அழிந்தபின் சிவபெருமான் வெளிப்பட்டார். திருமால் மோகினி அவதாரமெடுத்து அவனை அழித்ததை அறிந்தார். இருவரும் தாருகாவனத்து முனிவர்களின் செருக்கை அழிக்க மோகினியாகவும், பிக்ஷாடனராகவும் சென்றனர். அப்போது ஐயனார் அவதரித்தார் என்று பத்மபுராணம் கூறுகிறது.

## இந்திராணியைக் காத்தருளிய ஐயனார்:

கந்தபுராணத்தில் சூரபத்மனுக்கு அஞ்சிய இந்திரன் தன் மனைவியோடு சீர்காழிக்கு வந்து மூங்கிலாய் மறைந்து தங்கித் தவஞ் செய்ய முற்பட்டான். சூரபன்மனிடமிருந்து தன் மனைவி இந்திராணியைக் காத்தருளுமாறு ஐயனாரை வேண்டினான். ஐயனார் பூதகணங்கள் புடைசூழ வெள்ளை யானையின் மேல் பூரணை, புட்கலை என்னும் பெரும் தேவியரொடு இந்திரனுக்குக் காட்சி தந்தார். இந்திரன் சூரபன்மன் கொடுமையால் தேவர்கள் துயருறுவதையும், அதனைச்

சிவபெருமானிடம் தெரிவிக்கத் திருக்கயிலை செல்வதை யும் கூறித் தான் கயிலை சென்று திரும்பி வரும்வரை இந்திராணியை அடைக்கலமாக ஏற்றுக் காப்பாற்ற வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டான். ஐயனாரும் அதற்கிசைந்து தனது வீருள் மகாகாளர் என்பவரை இந்திராணிக்குக் காவலாக இருக்குமாறு கூறி மறைந் தார்.

சூரபன்மனின் தங்கை அஜமுகி என்பாள் அங்கு வந்து இந்திராணி தவம் புரிவதைக் கண்டு அவளைத் தூக்கிக் கொண்டு போய்த் தன் தமையன் சூரபத் மனுக்கு அளிக்க விரும்பினாள். முடிவில் இந்திராணியை அழைத்தாள். அவள் மறுக்கவே அவளை அஜமுகி தன் கையால் பிடித்து இழுத்தாள். அஞ்சி நடுங்கிய இந்தி ராணி,

பையரா அமளியானும் பரம்பொருள் முதலும் நல்கும்
ஐயனே! ஓலம்; விண்ணோர்க்கு ஆதியே! ஓலம்; செண்டார்
கையனே! ஓலம்; எங்கள் கடவுளே! ஓலம்; மெய்யர்
மெய்யனே! ஓலம்; தொல்சீர் வீரனே! ஓலம்; ஓலம்.

ஆரணச் சுருதியோர்கள் அடல் உருத்திரன் என்று ஏத்தும்
காரணக் கடவுள்! ஓலம்; கடல் நிறத்து எந்தாய்! ஓலம்;
பூரணைக்கு இறைவா! ஓலம்; புட்கலை கணவா! ஓலம்;
வாரணத்து இறைமேல் கொண்டு வரும்பிரான்! ஓலம். ஓலம்.

என்று ஐயனாரை விளித்துத் தன் அபயக் குரலை வெளிப்படுத்திப் பலவாறு கதறினாள்.

அபயக் குரல் கேட்டே ஐயனாரின் படைத் தலைவர் மகாகாளர் தன் வாட்படையைச் சுழற்றிக் கொண்டு இடிபோல் ஆரவாரித்து வெளிப்பட்டார். அஜமுகியைத் தடுத்தார். அவர் வார்த்தையைக் கேட்க மறுத்த அஜமுகி முத்தலைச் சூலத்தையும், மலையையும் அவர் மீது எறிந் தாள். மகாகாளர் அவற்றைப் பொடிப்படுத்தித் தன் ஆணையைக் கேளாது இந்திராணியைத் தீண்டிய அஜ முகியின் கையை வெட்டினார். காலால் அவளை இடறி ஓட்டினார். இந்திராணியைக் காத்த ஐயனார் கோயில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீர்காழியில் தென்பாதித் தெருவில் உள்ளது. இவ்விடத் திற்குக் கைவிடான்சேரி என்று இப்போது பெயர் வழங்கி வருகிறது.

சூரபத்மனுக்குப் பயந்த இந்திரன் கோமுத்தீசுரம் என்னும் திருவாவடுதுறைத் தலத்தில் தங்கித் தவம் புரிந் தான். அஜமுகி இந்திரனைக் கண்டு காதல் கொண்டு அவனைப் பலவந்தமாக அணைய முற்பட்டாள். அதன் காரணமாகக் கருவுற்ற அஜமுகி கிருத்தியா என்ற பெண் குழந்தையைப் பெற்றாள். கிருத்தியை கண்ணிற் கண்ட பொருட்களையெல்லாம் வாரி விழுங்கி நாச மாக்க முற்பட்டாள். ஐயனார் சிவபெருமான் ஆணைப் படி அவளைக் கடலில் எறிந்து உலகைக் காத்தருளி னார்.

**ஐயப்பன் வரலாறு:**

வஞ்சி நாட்டில் ஐயனார் பூரணையை மணந்து வாழ்ந்து வருவதை அறிந்த நேபாள மன்னன் பலஞன் தன் மகளை விடுத்து ஐயனார் பூரணையுடன் வாழ் வதைக் கண்டு வேதனையடைந்து ஐயனாரை நோக்கி '' மனிதனாகப் பிறந்து பன்னிரண்டு ஆண்டுகள் பிரம சாரியாக வாழ்வாயாக'' என்று சபித்தான். ஐயனா ரும் நாம் நிலவுலகில் தோன்றுவதற்கு இது ஒரு காரண மாயிற்று என்று கூறியும், அந்த நேபாள மன்னனை நோக்கி ''கேரளத்தில் பந்தள தேசத்தில் நீயே மன்ன னாய்ப் பிறப்பாய், அங்கே நான் குழந்தையாக உம் மிடம் வந்து பன்னிரண்டு ஆண்டுகள் வாழ்வோம்'' என்று கூறி மறைந்தார்.

கேரள நாட்டில் பந்தளம் என்ற பகுதிக்கு அரச னாகப் பாண்டிய மன்னன் பரம்பரையில் இராசசேகரன் என்ற பெயருடன் பிறந்து அரசு புரிந்தான் பலஞன். திருமணம் ஆகிப் பல்லாண்டுகளாகியும் புத்திரப்பேறு வாய்க்காமையினால் மனவேதனை அடைந்த மன்னன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபெருமானை வேண்டிப் பணிந்தான். சிவபெருமான் திருவருளால் ஐயனார் அம்மன்னனின் குழந்தையாக வரத் திருவுளங் கொண்டார்.

ஒருநாள் காட்டில் வேட்டையாடச் சென்ற மன்னன் குழந்தையொன்று அழுதுகொண்டிருப்பதைக் கண்டு அதனருகில் சென்றான். ஒளியும், தண்மையும் உடைய அக்குழந்தையின் முகத்தைக் கண்டு வியந்தான். சிவபெருமான் அந்தணர் உருவில் வந்து அரசனைநோக்கி ''மன்னா! இக்குழந்தை தெய்வாம்சம் பொருந்தியது. இதனைத் தெய்வம் உனக்கு அளித்திருக்கிறது எடுத்துச் சென்று வளர்த்துவா. இக்குழந்தையின் பெருமைகளை விரைவில் நீ உணர்வாய்!'' என்று கூறி மறைந்தார். மன்னன் மகிழ்ச்சிக்கடலில் திளைத்தவனாய் குழந்தையை அரண்மனைக்கு எடுத்துச்சென்று அரசியிடம் கொடுத்து 'மணிகண்டன்' எனப்பெயர் சூட்டி அன்போடு வளர்த்து வந்தான்.

குருதக்ஷிணை :

மன்னன் மணிகண்டனைக் குருகுலத்தில் சேர்த்துக் கல்வி பயிலுமாறு செய்தான். ஓதாமலே எல்லாவற்றையும் உணர்ந்த மணிகண்டனைப் பார்த்துக்குரு வியந்தார். மணிகண்டன் கடவுள் தன்மை பொருந்தியவன் என்று உணர்ந்த குரு, ஊமையும், குருடனுமாயிருக்கும் தன் மகனைக் குறையற்றவனாகச் செய்தருளுமாறு மணிகண்டனை வேண்டினார். மணிகண்டன் குருவின் மகனுக்கு இருந்த குருட்டுத் தன்மையையும், ஊமைத் தன்மையையும் ஒழித்து அவனை நிறைந்த ஞானமும் உடல் நலமும் உடையவனாகச் செய்தருளினார்.

அறிவிழந்த அரசி :

மணிகண்டனை மகனாக அடைந்தபின் மன்னன் மனைவி ஒரு ஆண்மகவைப் பெற்றிருந்தாள். அரசனும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்குழந்தைக்கு 'இராஜராஜன்' எனப் பெயரிட்டான். மணிகண்டர் தம் இளவல் இராஜனோடு கூடி விளையாடி மகிழ்ந்திருந்தார்.

மன்னனின் அமைச்சன் மணிகண்டனின் பேராற்றலை உணர்ந்து, "இவர் அரசரானால் நமக்குப் பெருமை இருக்காது" என்று நினைத்து எப்படியாவது மணிகண்டரை நாட்டை விட்டு விரட்டிவிட்டு இராஜராஜனை அரசனாக்க வேண்டுமென்று திட்டமிட்டான். மணிகண்டனிடம் அளவற்ற அன்பைப் பொழியும் மன்னனிடமிருந்து மணிகண்டனை எவ்வாறு பிரிப்பது என்று ஆராய்ந்து முடிவில் அரசியிடம் சென்றான். அவளிடம் "மன்னன் மணிகண்டனையே அரசனாக்குவான் போலத் தெரிகிறது. அரச பரம்பரையில் வந்த தங்கள் புதல்வன் இந் நாட்டு மன்னனாக ஆவதற்கு ஆவன செய்யுங்கள்" என்று கூறினான். அரசி, "அதற்கு வழியாது?" எனக்கேட்டாள். "தாங்கள் தாங்க முடியாத தலைவலியால் தவிப்பவர் போல் நடிக்க வேண்டும்! என்னுடைய தூண்டுதலால், புலிப்பால் கொண்டு வந்து தடவினால் தலைவலி தீரும் என்று மருத்துவர் கூறுவார். அதனைக் கேட்ட மணிகண்டன் தானே புலிப்பால் தருவதாகக் கூறிப் புறப்பட்டுப் போவான். புலியிடம் அகப்பட்டு இறப்பான்" என்று தீயவழி கூறினான் அமைச்சன். மந்தரையின் வார்த்தையினால் மனம்மாறிய கைகேயி போல மந்திரியின் சூழ்ச்சிக்குப் பலியானாள் அரசி. அமைச்சன் கூறியது போலவே தலைவலி வந்ததுபோல நடித்தாள். மருத்துவர், "இந் நோய் புலிப்பால் இன்றி தீராது" என்றார். மணிகண்டர், "நான் புலிப்பால் கொண்டு வருகின்றேன்" என்று கூறிப் புறப்பட்டார். கானகம் நோக்கிச் சென்றார்.

**மகிஷிவதம் :**

தனு என்ற அரசனுக்கு ரம்பன், கரம்பன் என்று இரு புதல்வர்கள் இருந்தனர். ரம்பனுடைய மகன் மகிடாசுரன் துர்க்கையால் கொல்லப்பட்டான். கரம்பனுக்கு மகிஷி என்ற பெயருடைய அரக்கப் பெண்ணொருத்தி இருந்தாள். மகிஷி பிரம்மனைக் குறித்து தவம்செய்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரம்பல பெற்று தேவருலகம் சென்று அரசு பெற்று, தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் இடையூறுகள் பல விளைவித்து வந்தாள்.

ஐயனார் மணிகண்டராகக் கானகம் வருவதை ஞானக் கண்களால் அறிந்த இந்திரன் முதலான தேவர் களும், முனிவர்களும் கானகம் வந்தனர். அவரை அழைத்துக் கொண்டு மேற்கு மலைத்தொடரில் பொன் னம்பல மேடு என்னும் இடத்திற்குச் சென்றனர். காந்த மலை எனப்படும் அம்மலையில் பொன்னம்பலத்தில் சிம் மாசனத்தில் மணிகண்டரை எழுந்தருளச் செய்து, தங்களுக்கு மகிஷி என்ற அரக்கியால் ஏற்பட்ட துன் பங்களைக் கூறி, மகிஷியை அழித்துத் தங்களைக் காத்தருளுமாறு மணிகண்டரை வேண்டினர். மணிகண் டர் உடனே தேவலோகம் சென்றார். மகிஷியுடன் போரிட்டு வென்று அவளைக் கொன்று தேவர்களைக் காத்தருளினார்.

**புலிவாகனார் :**

மகிஷியைக் கொன்றபின் மணிகண்டர் காந்தமலை வந்து அமர்ந்து தன் தாய் புலிப்பால் கேட்டதை இந்தி ரனிடம் கூறினார். இந்திரன் புலியானான். மணிகண் டர் அதன்மீது ஏறி அமர்ந்தார். ஏனைய தேவர்கள் பெண்புலிகளாய் உடன் வந்தனர்.

புலிமீது ஏறிப் புலிக்குழாத்துடன் வரும் மணிகண் டரைக் கண்டு நகர மக்கள் அஞ்சி ஓடினர். அமைச்சன் மயக்கமுற்றான். அன்னையும் அடாது செய்ததை எண்ணி வருந்தினாள். தந்தை மணிகண்டனை வாரித் தழுவினார். மணிகண்டன் அமைச்சரை தெளியவைத்து தாயைத்தேற்றி, ''அன்னையே எனக்கு அரசாளும் விருப்பம்இல்லை இராஜராஜனுக்கு பட்டம் சூட்டி நாட்டை அரசாளச் செய்யுங்கள். உலகநலம் கருதி பன்னிரண்டு ஆண்டுகள் உங்கள் பிள்ளையாய் வளர்ந்தேன். நான் வந்த காரியம் முடிந்தது. போய் வருகிறேன்'' என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறிப் புறப்பட்டார். மன்னனை நோக்கி 'சபரிமலை' யில் சரங்குத்திய இடத்தில் தனக்கு ஓர் ஆலயம் அமைக்குமாறு கூறு விடைபெற்றுக் காந்தமலை சென்றார்.

**சபரி மலையில் சாஸ்தா கோவில்:**

மணிகண்டரின் பிரிவாற்றாது மன்னன் இராஜசேகரன் மனம் வருந்தினான். கும்பமுனி அம்மன்னனின் வருத்தத்தை மாற்றி ஆறுதல் கூறினார். சில நாட்கள் சென்றபின் மன்னன் தன் படையோடு சபரிமலை சென்றான். அங்கு சரங்குத்திய மரத்தைக்கண்டு அவ்விடத்தில் கோயிலைக்கட்டத்தீர்மானித்தான். இரவுப்பொழுது வந்தது. உறங்கிய மன்னனை ஒருபூதம் தூக்கிச்சென்று காந்தமலையில் இருந்த ஐயப்பரிடம் விட்டது. மன்னன் காந்தமலையிலுள்ள, பொற்கோவிலில் தேவர்கள் புடைசூழவீற்றிருப்பதைக் கண்டான். மணிகண்டர் மன்னனை வரவேற்று உபசரித்தார். சபரிமலையில் தான் அமர்ந்துள்ள ஐயனார் கோலத்தில் ஒரு கோயில் கட்டுமாறு கூறினார். ''இடையூறுகள் வரின் பயன்படுத்துக'' என்று ஒரு கத்தியையும் வழங்கி அனுப்பினார். மன்னன் சபரிமலையில் சிறந்த சிற்பிகளைக் கொண்டு, கோயில் கட்ட முற்பட்டான். இந்திரன் தானே அக்கோவிலைக் கட்ட வேண்டும் என்று மன்னனைத் தடுத்தான். இருவருக்கும் போர் மூண்டது. மன்னன் மணிகண்டர் தந்த கத்தியால் இந்திரனோடு போரிட்டான். முடிவில் இந்திரன் மன்னனைச் சரண் அடைந்தான். மன்னனும், இந்திரனும் விசுவகர்மாவின் துணையோடு பதினெட்டுப் படிகளுடன் கூடிய சபரிமலைக் கோயிலைக் கட்டினர். சாஸ்தாவின் திருவுருவைப் பரசுராமர், அகத்தியர், தேவர், முனிவர் முதலியோர் துணையுடன் வழிபட்டனர் மன்னன் பிரதிஷ்டை செய்தான்.

சின்முத்திரையோடு கூடிய வலக்கரமும், முழங்காலின் மீது நீட்டிய இடக்கரமும் கொண்டவராய்க் குந்தி அமர்ந்த கோலத்தில் சாஸ்தாவைப் பிரதிஷ்டை செய்தான் மன்னன். அன்றுமுதல் இன்றுவரை '' சபரிமலை சாஸ்தா '' பல்லாயிரக்கணக்கான பக்தர்களின் அன்புத் தெய்வமாய் விளங்கி அருள் புரிந்து வருகிறார்.

'பிள்ளையார் இல்லம்'
ஐயனார் கோயிலடி,
அளவெட்டி வடக்கு.

தொகுப்பு :
**திரு. சிவபாதரத்தினம் சிவசிவா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# யாழ் / அளவெட்டி, வடக்கு - சாத்தாகலட்டி

# ஸ்ரீ ஐயனார் திருப்பொன்னூஞ்சல்

## காப்பு

மன்னோங்கு மேருவிலே மறைவரைந்த
வாரணனே கணபதியே அடியார்வேண்ட
முன்னோங்கு கற்பகமாய் நிற்கும்தேவா
முக்கண்ணி உமை மைந்தா அளவையூரில்
பன்னோங்கு நிலச்சாத்தா கலட்டிமேவும்
பரம்பொருளாம் ஐயனார் ஊஞ்சல் பாட
மின்னோங்கு சடாமகுட சோதிரூப
விநாயகனே நின்திருத்தாள் காப்பதாமே.

## நூல்

வளர்நீல வண்ணமும் பிரபை வீசும்
மணிமுடியும் குண்டலமும் ஞானநோக்கும்
இளநகையும் வச்சிரமும் செண்டுக்கையும்
இருகரங்கள் வரதமுடன் அபயமாகக்
கிளர்வடிவும் கொண்டுதித்த கீர்த்தியானே.
கீதவிசை பாடுவோன் தனக்கிரங்கி
அளவெட்டி யூர்சாத்தா பதியில் மேவும்
அரிஹரபுத் திரனாரே ஆட்ருஞ்சல்.

பொன்பெருகு மறைநான்கும் தூண்களாக
பொருந்துசிவா கமங்களெலாம் நாண்களாக
இன்பமிகு புராணங்கள் விட்டமாக
எண்ணெட்டுக் கலைகள் பரி வட்டமாக
முன்புணரும் பிரணவமே பீடமாக
முதன்மைபெறு திருமுறைகள் மாடமாக
அன்பளவை யூர்சாத்தா பதியில்மேவும்
அரிஹர புத் திரனாரே யாடீருஞ்சல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீலமிகும் ஒருபத்தன் பனந்தோட்டத்துள்
சிறுகுடிசை யமைத்துவாழ் கின்றகாலம்
கோலமிகு கனவினிலே வந்து தோன்றிக்
''குறித்தென்னை வழிபட்டால் நன்மைகாண்பாய்
பாலமுது தாம்பூலம் போது'' மென்ற
பகர்ந்தபடி பனையடியில் பூசை ஏற்றாய்
ஆலளவை யூர்சாத்தா பதியில்மேவும்
அரிஹரபுத் திரனாரே ஆடீஞ்சல்.

செறிகடலில் வருமமுதைப் பகிர்ந்தளித்த
திருமாலாம் மோகினியும் பிச்சைஏற்ற
இறையோனும் நாவலந்தீ வுக்கடல் பால்
இணைந்தகரை யோரத்தில் சேர்ந்து பெற்ற
மறைமுதலே, வீரமா காளன், சேனை
மகாதிபனால் சசிதேவி துயரம் தீர்த்தாய்
அறிவளவை யூர்சாத்தா பதியில் மேவும்
அரிஹரபுத் திரனாரே ஆடீஞ்சல்.

பானுவுடன் மதியோனும் குடைகள் தாங்க
பங்கயனும் கலைமகளும் வேதமோத
வானவரும் திசாதிபரும் விருதுபேண
மலர்மகளும் திருமாலும் மாலைபூண
ஞானஉமை பரமசிவன் ஆசிகூற
யானைமுகன் வேலழகன் அருகிருக்க
ஆனளவை யூர்சாத்தா பதியில்மேவும்
அரிஹரபுத் திரனாரே ஆடீஞ்சல்.

பெருங்கொலுவில் நீயிருக்கும் பனையின்கீழ் வீழ்
பிறங்கு பழம் தூய்மையிலாப் பெண்ணொருத்தி
நெருங்கியெடுத் ததாலதையாண் பனையாய்
மாற்றி
நெடிய அற் புதம்புரிந்த ஐயனாரே
ஒருங்கு புலிப் பாலெடுக்கத், தேவர் சேனை
உயர் புலியாய்க் கொண்டமணி கண்டனாரே
அரங்களவை யூர்சாத்தா பதியின் மேவும்
அரிஹரபுத் திரனாரே ஆடீஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிஷனின் சிற்றப்பன் கரம்பன் என்பான்
மகள் மகிஷி தனைமாய்த்து, *மன்னன் வேண்ட
மகரமதிச் சோதிதரும் கருணை மிக்க
மலைசபரி தனிலமர்ந்த ஆதிதேவா
அகரமுதல் அட்சரங்கள் அனைத்துமாகி
அணிசிவனும் மாலூம் ஒன் றென்றுணர்த்தி
அகலளவை யூர்சாத்தா பதியில் மேவும்
அரிஹரபுத் திரனாரே ஆடீருஞ்சல்.

(* மன்னன் பந்தள நாட்டு இராஜசேகர பாண்டியன்)

பழகுமடியார் வினையைப் போக்குதற்குப்
பயிலபய கரங்காட்டி யோகங்காட்டி
பிழைபொறுக்கும் முகங்காட்டி மின்னார் மேனிப்
பிரகாச வடிவுடனே கோயில் கொண்ட
குழையழகா அடியேங்கள் மனங்கலங்கும்
குறைகேட்டுச் சுகவாழ்வு தரலாகாதோ,
அழகளவை யூர்சாத்தா பதியில்மேவும்
அரிஹரபுத் திரனாரே ஆடீருஞ்சல்.

தெருளலரும் முகமாட மகுடமாட
சிவந்தசடை யாட மலர் விழிகளாட
பொருளுதவு கரமாடப் பூணூலாட
பூரணையும் புட்கலையும் மருங்கிலாட
உருள் மாலை யாட மலர்ப் பாதமாட
உயர்வெள்ளை வாரணமும் சுரருமாட
அருளளவை யூர்சாத்தா பதியில்மேவும்
அரிஹரபுத் திரனாரே ஆடீருஞ்சல்.

நமசிவாய நாயகனே ஆடீருஞ்சல்
நாரணனின் வடிவோனே ஆடீஞ்சல்
சமயநெறி சொன்னவனே ஆடீருஞ்சல்
சாத்தாப்பேர் மன்னவனே ஆடீருஞ்சல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமனிடரைத் தீர்ப்பவரே ஆடீருஞ்சல்
இணையடியில் சேர்ப்பவரே ஆடீருஞ்சல்
அமுதளவை வாழ்பவரே ஆடீருஞ்சல்
அரிஹரபுத் திரனாரே ஆடீருஞ்சல்.

## வாழி

ஆரணங்கள் வாழிசிவ நீதிவாழி
ஆகமமும் ஆலயமும் செழித்துவாழி
பேரணியும் புராண இதி காசம் வாழி
பெருவளமும் பசுவினமும் சிறந்துவாழி
பூரணையின் புட்கலையின் கருணைவாழி
பொலி அளவை ஐயனார் திருத்தாள் வாழி
சீருடனே அவரடியார் கூட்டம் வாழி
செந்தமிழும் தவநெறியும் வாழி வாழி.

சுபம்

ஆக்கியோன் :
நாகேஸ்வரம் அளவெட்டி, **அருட்கவி சீ. விநாசித்தம்பிப் புலவர்.**
(01-12-2000)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# ஸ்ரீ ஐயப்ப கவசம்

அரிஹரபுத்ரா அன்பா நமோ நமோ
சபரிகிரீசா சாஸ்தா நமோ நமோ
பதினென் படிவாழ் பரமா நமோ நமோ
ஐங்கரன் சோதரா ஐயப்பா நமோ நமோ

பொன்னம் பலத்துறை புண்ணியா நமோ நமோ
புலிப்பால் ஈந்த புண்ணியா நமோ நமோ
கரிகா யுதமுடைக் சுந்தரா நமோ நமோ
மஹிஷி மர்த்தனா மணிகண்டா நமோ நமோ

சரணம் சரணம் சபரிகிரீசா
சரணம் சரணம் சத்ய ஸ்வரூபா
சரணம் சரணம் சர்வ தயாளா
சரணம் சரணம் ஸ்வாமியே சரணம்
(ஸ்ரீ பரசுராமரால் ஐயப்பனைத் துதிக்கப்பட்ட கவசம்)

**திருஜ. கிருஷ்ணபிள்ளை (பெருமாள்)**

## வைரவர் பாடல்

ஆதிமூலநாதனே பால வைரவா
ஆதிசிவன் பாலனே பால வைரவா
திரிசூலநாதனே பால வைரவா
தில்லைநாதன் பாலனே பால வைரவா

வடைமாலை தரித்தவரே பால வைரவா
வரம் தந்து காருமையா பால வைரவா
சுடலை நடனம் ஆடியவா ஞான வைரவா
சுத்தசிவமானவரே ஞான வைரவா

பிள்ளையாரின் தம்பியாரே பால வைரவா
பிழைகளை எல்லாம் பொறுத்தருள்வாய் பால வைரவா

வேலவனின் தம்பியாரே பால வைரவா
வேதனைகள் தீர்த்திடுவாய் பால வைரவா

நான் மறையின் நாயகனே பால வைரவா
நவணிவாகனம் கொண்டவரே பால வைரவா

உன்னடியார் துயர்தீர்த்த பால வைரவா
உடனிருந்து காத்திடப்பா பால வைரவா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# அளவெட்டி வடக்கு அருள்மிகு ஐயனார் கோவில் பிராயச்சித்த, பாலஸ்தாபன, மகாகும்பாபிஷேக, மண்டலாபிஷேக, திருப்பணிவேலைகள்

# வரவு செலவு அறிக்கை - 2000

அளவெட்டி வடக்கு ஐயனார் ஆலய 23-08-1999 (திங்கட் கிழமை) நடந்தேறிய பிராயச்சித்த அபிஷேகம், 30-08-1999 (திங்கட்கிழமை) நடந்தேறிய பாலஸ்தாபனம், 20-03-2000 (திங்கட்கிழமை) நடந்தேறிய மகாகும்பாபிஷேகம், 03-05-2000 (புதன்கிழமை) நடந்தேறிய மண்டலாபிஷேகம் ஆகியவற்றின் வரவு - செலவு விபரங்களும், ஆலய திருப்பணி வேலைகளின் வரவு செலவு விபரங்களும், அன்பளிப்புகள் செய்து திருப்பணி வேலைகளையும், விழாவையும் சிறப்பாக நடாத்த உதவிய அடியார்களின் பெயர் விபரங்களையும் திரு. கி. சிவபாதரத்தினம் ஆகிய நான் ஐயனார் அடியார்களுக்கு அறியத் தருகின்றேன்.

## ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் மூர்த்திகள் :

அரசடிப் பிள்ளையார்
கோவில் பிள்ளையார்
மூலமூர்த்தி (பூரணை, புட்கலை சமேத ஐயனார்)
எழுந்தருளி மூர்த்தி (பூரணை, புட்கலை சமேத ஐயனார்)
முருகன் (வேலாயுதம்)
தம்பத்தடிப் பிள்ளையார்
நந்தி, பலிபீடம்
நாகதம்பிரான்
வீரமாகாளர்
வைரவர் (சூலம்)

பூசகர் : திரு. ஐ. கிருஷ்ணபிள்ளை ஐயர்
பிரதம குரு : சிவஸ்ரீ செல்வ வைரவநாதக் குருக்கள்
உரும்பராய் ஞான வைரவர் கோவில் ஆதீனம்.
பூமாலை சாத்துப்படி : திரு. ஐ. கிருஷ்ணபிள்ளை ஐயர்
மங்கல வாத்தியம் : திரு. K. S. சிவமயம் குழுவினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோவிலுக்கு வேண்டிக்கொடுத்த பொருட்களின் விபரம்:

| | |
|---|---|
| உருத்திராக்கம் (ஒருகாய்) பவுண்கட்டியது தாலிப்பொட்டு — 2 | மூலஸ்தான மூர்த்தி |
| உருதிராக்க மாலை (பவுண்கட்டியது) தாலிப்பொட்டு — 2 | எழுந்தருளி மூர்த்தி |

சேலை — 2, பட்டுக்கள், ஒற்றைத்தீபம், கர்ப்பூரத்தட்டு, அடுக்குத் தீபம், பஞ்சலாராத்தி, வீபூதிமடல், சந்தணக்கும்பா, குடம், செம்பு, பூத்தட்டம், கைமணி, பஞ்சபாத்திரம், குத்துவிளக்கு, தீபவிளக்கு, தூண்டாமணி விளக்கு, அமுது படைக்கும் கிண்ணம், பொங்கல்ப்பானை, கிணற்றுவாளி, கயிறு.

## பொருட்கள் அன்பளிப்புகள்:

| | |
|---|---|
| நெல் | — பிரம்மஸ்ரீ இ. சோமசுந்தரக் குருக்கள் |
| 3 கும்ப வேஷ்டி | — சிவஸ்ரீ தா. மகாதேவக் குருக்கள் |
| 4 முடி | — திரு. ஐ. திருநாவுக்கரசு |
| 50 ஓடுகள் | — திரு. கோ. விக்கினேஸ்வரன் |
| 1 குடை | — திருமதி வ. மதி |
| 25 சீமெந்துக்கல் | — திருமதி மு. தர்மவதி |
| 5 முகட்டு ஓடு | — திரு. ந. செல்லத்துரை |
| வாழைக்குலை | — திரு. க. முருகையா, திரு. சு. கனகசபை |
| பலாப்பழம் | — திரு. பா. சிவம் |
| அபிஷேகத்திற்குரிய பால் | — திரு. பொ. சுந்தரலிங்கம், திரு. ச. சின்னத்துரை |
| ஆலய முகப்பு ஐயனார் பட ஓவியம் : | திரு. செ. சிவப்பிரகாசம் |
| ஐயனார் படத் திரை : | திரு. வை. சொக்கலிங்கம் |

## நடந்தேறிய திருப்பணி வேலைகள்:

அரசடிப் பிள்ளையார் முன்மண்டபம் முற்றாக திருத்தியமைக்கப்பட்டது. மூலஸ்தான தூபி திருத்த வேலை, அர்த்த மண்டபம் மேல் பிளாட் வேலை, நிருத்த மண்டபம் முற்றாக திருத்தியமைத்தமை, மகாமண்டபம் முற்றாக திருத்தியமை, பலிபீட மண்டபம் திருத்தவேலை, பிள்ளையார், முருகன் தூபி கட்டியது, அரசடிப்பிள்ளையார், நாகதம்பிரான், வீரமாகாளர் ஆலய தூபி பெயின்ற் அடித்தது, வைரவர் ஆலய முன் மண்டபம் கட்டியது, அரசடிப் பிள்ளையார் கதவு, மூலஸ்தான கதவு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெற்கு வாசல் கதவு, பிள்ளையார் கதவு, முருகன் கதவு, வைரவர் கதவு புதியதாக போடப்பட்டது, ஆலய சுவர்கள் வெள்ளையடிக்கப்பட்டது, ஆலயக் கிணற்றடி திருத்தம், நுழை வாயில் முடிவைக்கப்பட்டது.

**நடைபெற வேண்டிய திருப்பணி வேலைகள்:**

நிலத்திற்கு காறை போடுதல்
பலிபீட மண்டப சுவர் கட்டுதல்
ஆலய சுற்று மதில் கட்டுதல்
ஆலய முன் சுவர் திருத்துதல்

## வரவு

| | ரூபா சதம் |
|---|---|
| 1991ஆம் ஆண்டு மிகுதிக் கையிருப்பு | 5941-60 |
| திரு. சி. தனபாலா, கொழும்பு | 1001-00 |
| திரு. G. நற்குணம், லண்டன் | 35000-00 |
| திரு. A. வைரவமூர்த்தி, லண்டன் | 22200-00 |
| திரு. தா. சரவணமுத்து, கொழும்பு | 13000-00 |
| திருமதி S. நகுலேஸ்வரி, பிரான்ஸ் | 10000-00 |
| திரு. S. ஸ்கந்தவராசா, கனடா | 7000-00 |
| திரு. ப. தளையசிங்கம், கனடா | 7000-00 |
| திரு V. வைரமுத்து, லண்டன் | 5500-00 |
| செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி, தெல்லிப்பழை | 500 -00 |
| திரு. க. பாலசுப்பிரமணியம், அளவெட்டி | 5000-00 |
| திரு. மு. ரவிதாஸ், அளவெட்டி | 5000-00 |
| திரு. சி சிவதாஸ், அளவெட்டி | 4000-00 |
| திரு. M. P. பாலகிருஷ்ணன், கொழும்பு | 4000-00 |
| திரு. அ. ஆனந்தகுமாரன், கொலண்ட் | 3350-00 |
| திரு. சு. வரதராஜன், நெதர்லாந்து | 3350-00 |
| திருமதி செ. நீலாம்பாள், அளவெட்டி | 3000-00 |
| திரு. K. பரதன், மலேசியா | 3000-00 |
| திரு. க. முருகையா, அளவெட்டி | 3000-00 |
| திருமதி P. சரோஜினி, அவுஸ்ரேலியா | 2100-00 |
| திரு. செ. இதயமூர்த்தி, பிரான்ஸ் | 2000-00 |
| திருமதி த. கனகம்மா, கொழும்பு | 2000-00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், பண்டாரநாயக்க மாவத்தை, கொழும்பு | 2000-00 |
| திரு. M. மணிசேகரன், அளவெட்டி | 2000-00 |
| திரு. செ. குடணன், பிரான்ஸ் | 2000-00 |
| திரு. இ. இராசரத்தினம், அளவெட்டி | 1500-00 |
| CAMBRIOGE TRADERS. கொழும்பு | 1500-00 |
| திரு. வ. நகுலேஸ்வரன், அளவெட்டி | 1250-00 |
| திரு. பொன். தனபாலசிங்கம். இணுவில் | 1005-00 |
| திரு. ச. தாமோதரம்பிள்ளை. அளவெட்டி | 1001-00 |
| திரு. சி. சு. பொன்னுத்துரை, அளவெட்டி | 1001-00 |
| திரு. ப. பாலசிங்கம், அளவெட்டி | 1000-00 |
| திரு. செ. சண்முகநாதன், திருகோணமலை | 1000-00 |
| திருமதி நடராசா - நாகேஸ்வரி, அளவெட்டி | 1000-00 |
| திரு. S. சிதம்பரநாதன், அளவெட்டி | 1000-00 |
| திரு. S. விஜயராகவன், தெஹிவளை | 1000-00 |
| திரு. தி. ரவீந்திரன், இணுவில் | 1000-00 |
| திரு. வ. சிவலோகநாதன், அளவெட்டி | 1000-00 |
| திரு. த. தனபாலசிங்கம், கொழும்பு | 1000-00 |
| திரு. ஆ. சசிதரன், ஆபிரிக்கா | 1000-00 |
| திரு. R. S. கேசவமூர்த்தி, அளவெட்டி | 1000-00 |
| திரு. T. பத்மநாதன், அவுஸ்ரேலியா | 1000-00 |
| திரு. N. K. பாலசுப்பிரமணியம், அளவெட்டி | 1000-00 |
| திரு. அ. வாமதேவன், அளவெட்டி | 1000-00 |
| செல்வி சசிமளா சின்னராசா, அளவெட்டி | 1000-00 |
| சிவஸ்ரீ K. நகுலேஸ்வரக் குருக்கள், கீரிமலை | 1000-00 |
| திருமதி சாந்தினி ஞானரத்தினம், அளவெட்டி | 1000-00 |
| திரு. R. ஞானசம்பந்தன், அளவெட்டி | 1000-00 |
| திரு. வை. சொக்கலிங்கம், அளவெட்டி | 1000-00 |
| திரு. R. கேதீஸ்வரன், அளவெட்டி | 1000-00 |
| திருமதி ஆ. சிவஞானசுந்தரம், அளவெட்டி | 1000-00 |
| திரு. ந. வடிவேலு, அளவெட்டி | 1000-00 |
| திரு. கை. கணேசரத்தினம், அளவெட்டி | 1000-00 |
| திரு. கோ. இரத்தினசாமி, அளவெட்டி | 1000-00 |
| திரு. பா. சுரேஸ்குமார், அவுஸ்திரேலியா | 1000-00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| திரு. S. சந்திரகாந்தன், பிரான்ஸ் | 1000-00 |
| திரு. S. சிவகுமார், பிரான்ஸ் | 1000-00 |
| திருமதி S. கண்மணி, அளவெட்டி | 1000-00 |
| திரு. M. மாணிக்கம், அளவெட்டி | 550-00 |
| சிவஸ்ரீ பா சிவரூபக் குருக்கள், கொழும்பு | 500-00 |
| திரு. N. K. சசிதரன், அளவெட்டி | 500-00 |
| திரு. N சிவபாதம், அளவெட்டி | 500-00 |
| திரு. M. P. நாகேந்திரம், சாவகச்சேரி | 500-00 |
| திரு. N. குமரகுரு, அளவெட்டி | 500-00 |
| திரு. சா. உருத்திரபசுபதி, அளவெட்டி | 500-00 |
| திரு. து. முருகையா, அளவெட்டி | 500-00 |
| திரு. N. K. பத்மநாதன், அளவெட்டி | 500-00 |
| திரு. க கணேஸ்வரன், கொழும்பு | 500-00 |
| திரு. அ. தம்பிராசா, அளவெட்டி | 500-00 |
| திரு. க. அரியகுணராசா, அளவெட்டி | 500-00 |
| திரு. பொ. சதீஸ், தெல்லிப்பழை | 500-00 |
| திரு. க. துஷ்யந்தன், அளவெட்டி | 500-00 |
| திரு. செ. குமாரசாமி, அளவெட்டி | 500-00 |
| திரு. தி தம்பிநாயகம் இந்தியா | 500-00 |
| திரு. செ. வேணுகோபால், அளவெட்டி | 500-00 |
| திரு. ஆ. பாலசுப்பிரமணியம், கொழும்பு | 500-00 |
| திரு. N. K. சிவப்பிரகாசம், அளவெட்டி | 500-00 |
| திரு. ந. கனகசபை, தெஹிவளை | 500-00 |
| திரு. S. கைலாசநாதன், கனடா | 500-00 |
| Dr. S. A. குஞ்சிதபாதம், கனடா | 500-00 |
| செல்வி வி. வள்ளிநாயகி, அளவெட்டி | 500-00 |
| திரு. N. கேதீஸ்வரன், அளவெட்டி | 500-00 |
| திரு. ச. அசோகன், அளவெட்டி | 500-00 |
| திரு. மா. வைத்தீஸ்வரன், அளவெட்டி | 500-00 |
| திரு. பொ. தர்மபாலசுந்தரம், அளவெட்டி | 500-00 |
| திரு. சா. முரளிதரன், அளவெட்டி | 500-00 |
| செல்வி தாட்சாயினி சின்னராசா, அளவெட்டி | 500-00 |
| திரு. சு. பாலச்சந்திரன், அளவெட்டி | 500-00 |
| திரு. மு. சிவப்பிரகாசம், கொழும்புத்துறை | 500-00 |
| திரு. சொ. பசுபதிநாதஐயர், அளவெட்டி | 500-00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| திருமதி க. இராசம்மா, அளவெட்டி | 500-00 |
| திரு. சு. கணேசமூர்த்தி, தாவடி | 500-00 |
| திரு ப. நாகராசா, அளவெட்டி | 500-00 |
| திரு. S. சுப்பிரமணியம், அளவெட்டி | 500-00 |
| திருமதி R. மேகலா, அளவெட்டி | 500-00 |
| திரு. தி விக்னேஸ்வரன், அளவெட்டி | 500-00 |
| திரு. சு. சிவனேசராசா, அளவெட்டி | 500-00 |
| திரு. சு. பிறேமலிங்கம், அளவெட்டி | 500-00 |
| திரு. சு. ஜோதிவடிவேல், அளவெட்டி | 500-00 |
| திரு நா. அருளானந்தன், அளவெட்டி | 500-00 |
| திரு. ஆ. கைலாசபிள்ளை, அளவெட்டி | 500-00 |
| திரு. V. சுரேஸ், அளவெட்டி | 500-00 |
| திரு. பொ. சிவனேசன், அளவெட்டி | 500-00 |
| திருமதி க. ஜெயலட்சுமி, அளவெட்டி | 500-00 |
| Dr. இ. தெய்வேந்திரம், யாழ்ப்பாணம் | 500-00 |
| திரு. க. சிவசம்பு, அளவெட்டி | 500-00 |
| திரு. V. பூபாலசிங்கம், கொழும்பு | 500-00 |
| திரு. K. நந்தகுமார், அளவெட்டி | 300-00 |
| திரு. S. சண்முகசுந்தரம், அச்சுவேலி | 250-00 |
| திரு. து. சுப்பிரமணியம், திருகோணமலை | 250-00 |
| திரு. சி. சுந்தரமூர்த்தி, அளவெட்டி | 250-00 |
| திரு. M. பஞ்சாபிகேசன், சாவகச்சேரி | 250-00 |
| திரு. சி. தில்லைநாதன், சாவகச்சேரி | 250-00 |
| திரு. இ. நவரத்தினம், அளவெட்டி | 250-00 |
| திரு. இ. புண்ணியமூர்த்தி, இணுவில் | 250-00 |
| திரு. ச. தில்லைநாதன், அளவெட்டி | 250-00 |
| Dr. S. மகாலிங்கம், வவுனியா | 250-00 |
| திரு. க. பொன்ராசா, அளவெட்டி | 250-00 |
| திரு. சு. வைத்தியநாதன், அளவெட்டி | 250-00 |
| திரு. வ. குமாரசாமி, அளவெட்டி | 250-00 |
| திரு. பசுபதி ஸ்ரீஸ்கந்தன், அளவெட்டி | 250-00 |
| திரு. S. கனகசபை, அளவெட்டி | 250-00 |
| திரு. R. இராதாகிருஷ்ணன், இணுவில் | 250-00 |
| சிவஸ்ரீ தா. மகாதேவக்குருக்கள் இணுவில் | 250-00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| திரு. M. வர்ணகுலசிங்கம், சிறுவிளான் | 200-00 |
| திரு. தி. இராசேந்திரன், வெள்ளவத்தை | 200-00 |
| திரு. T. ஜெயசீலன், தெல்லிப்பழை | 200-00 |
| திரு. சி. வைத்திலிங்கம், அளவெட்டி | 200-00 |
| திரு. த. குமாரசுந்தரம், மாவிட்டபுரம் | 200-00 |
| திருமதி சி. பவானி, மாவிட்டபுரம் | 200-00 |
| திருமதி N. தனலட்சுமி, தெல்லிப்பழை | 200-00 |
| திரு. P. மகேந்திரவர்மன், சிறுவிளான் | 200-00 |
| திரு. சி. பாலசுப்பிரமணியம், அளவெட்டி | 200-00 |
| திரு. ந. துளசிதாசன், அளவெட்டி | 200-00 |
| திரு. க. சின்னத்துரை, அளவெட்டி | 200-00 |
| திரு. கோ. சிவகரன், இணுவில் | 200-00 |
| திரு. வி. சட்டநாதன், அளவெட்டி | 200-00 |
| திரு. V. M. சுந்தரன், கொழும்பு | 150-00 |
| திரு. அ. விஸ்வநாதன், அளவெட்டி | 110-00 |
| திருமதி திலகவதி இராசதுரை, அளவெட்டி | 110-00 |
| திரு. K கணேசரத்தினம், அளவெட்டி | 100-00 |
| திரு. இ. துரைசிங்கம், கொழும்பு | 100-00 |
| திரு. V. தில்லைநாதன், மாவிட்டபுரம் | 100-00 |
| திரு. இ. க. திலகன், கொழும்பு | 100-00 |
| திரு. நா. மகேஸ்வரன், கொழும்பு | 100-00 |
| திரு. K. குணபாலன், அளவெட்டி | 100-00 |
| திரு. S. நவரத்தினம், அளவெட்டி | 100-00 |
| செல்வி சி. தையல்முத்து, அளவெட்டி | 100-00 |
| சிவஸ்ரீ உருத்திரமூர்த்திக்குருக்கள், அளவெட்டி | 100-00 |
| திரு. M. கதிர்காமநாதன், அளவெட்டி | 100-00 |
| திரு. S. பவானந்தன், அளவெட்டி | 100-00 |
| திருமதி சோ. தங்கம்மா, அளவெட்டி | 100-00 |
| திரு. அ. அமிர்தலிங்கம், அளவெட்டி | 100-00 |
| திரு. கு. குகானந்தன், இணுவில் | 100-00 |
| திரு. சு. நாகம்மா, அளவெட்டி | 100-00 |
| திரு. ஆ. நாகராசா, நல்லூர் | 100-00 |
| திரு. பொ. கந்தசாமி, அளவெட்டி | 100-00 |
| செல்வி ம. தரண்யா, அளவெட்டி | 100-00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| திரு. பொ. கந்தையா, அளவெட்டி | 100-00 |
| திரு. P மாணிக்கப்பிள்ளையார், அளவெட்டி | 100-00 |
| திரு. சொ. செல்வா, கோண்டாவில் | 100-00 |
| திரு. ந. செல்லத்துரை, அளவெட்டி | 100-00 |
| திரு சி. சிறீதரன், அளவெட்டி | 100-00 |
| திரு. கி. சி. சிவசாமி, U. K. | 2445-90 |
| கோவில் மரம் விற்றது | 19000-00 |
| மொத்தம் | 247265-50 |

# செலவு

| | ரூபா சதம் |
|---|---|
| பாலஸ்தாபன, கும்பாபிஷேக விஞ்ஞாபனம் (அச்சுக்கூலி) | 1765-50 |
| பற்றுச்சீட்டு | 300-00 |
| பூசை உபகரணப் பொருட்கள் | 5555-00 |
| பிராயச்சித்தம் | 947-50 |
| பாலஸ்தாபனம் | 4883-00 |

## திருப்பணி வேலைகள் பொருட்கள்:

| | |
|---|---|
| 45 பைக். சீமெந்து | 23325-00 |
| 11 லோட் மணல் | 7465-00 |
| 3 லோட் சல்லி | 2100-00 |
| மரங்கள் (வளை, சிலாகை, ஆணி, சொலிக்கலம்) | 8681-00 |
| 270 ஓடுகள் | 5200-00 |
| கதவு, நிலை, பிணைச்சல், பூட்டு முதலியன | 7229-00 |
| சிப்பி, தும்பு, வச்சுரம், வாம்லாக் முதலியன | 2912-00 |
| பொருட்கள் ஏற்றுக்கூலி (லான்மாஸ்ரர்) | 1050-00 |
| பெயின்ற் (வாங்கியது) | 11335-00 |
| மேசன் கூலி | 16550-00 |
| தச்சுவேலை (கூலி) | 12750-00 |
| சிற்பவேலை (கூலி) | 5750-00 |
| பெயின்ற் வேலை (கூலி) | 5675-00 |
| வெள்ளையடித்த கூலி | 4100-00 |
| கோயில் காணி (வீதி) திருத்திய கூலி | 3650-00 |
| கோவில் முன் ஐயனார் பட பிறேம் | 3500-00 |
| வேல் (முருகன்) | 550-00 |
| கண்டாமணி (அசையாமணி) | 18650-00 |
| பத்திரிகை விளம்பரம் | 1950-00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கும்பாபிஷேகம் :

| | |
|---|---|
| உருத்திராக்கமாலை - 2, தாலிப்பெபருட்டு - 4 | 7000-00 |
| கும்பாபிஷேகப் பொருட்கள் | 21349-75 |
| இயந்திரங்கள் | 3000-00 |
| அஷ்ட பந்தன மருந்து | 3500-00 |
| அன்னதானம் | 2680-00 |
| குருக்கள்மார், பூசகர்கள் தெட்சணை | 8420-00 |
| மங்கல வாத்தியம் | 3200-00 |
| ஒலிபெருக்கி, மின்சாரம் | 2000-00 |
| வேலையாட்கள் தெட்சணை | 1950-00 |
| குருமார் உணவு | 2000-00 |
| வெள்ளை கட்டியது | 500-00 |
| தேனீர் செலவு | 1094-50 |

## மண்டலாபிஷேகம்:

| | |
|---|---|
| மண்டலாபிஷேகப் பொருட்கள் | 5537-25 |
| குருமார் தெட்சணை | 2755-00 |
| அமுது | 400-00 |
| சாத்துப்படி மாலை, பூமாலை | 800-00 |
| தீக்குளிப்பு | 2100-00 |
| Photo (படம்) | 2350-00 |
| பயணச் செலவு | 1120-00 |
| வெளியூர் தபால் செலவு | 936-00 |
| மரம்தறித்த கூலி, மரக் கூட்டுத்தாபனம் | 6400-00 |
| இடம்பெயர்ந்த போது கோவில் பூசகருக்கு கொடுத்தது | 1000-00 |
| இடம்பெயர்ந்த போது கும்பாபிஷேக நினைவு விழா (அளவெட்டி நாகவரநாராயணர் கோயில், சங்கத்தானை பேச்சியம்மன், கொழும்பு ஸ்ரீ துர்க்கை அம்மன் ஆலயம்) | 5000-00 |
| கும்பாபிஷேக மலர் (அச்சுக்கூலி) | 11650-00 |
| கும்பாபிஷேக மலர் அனுப்பும் தபால் செலவு | 2000-00 |
| படம் (போட்டோஸ்டற்) மலரிலுள்ளது | 600-00 |
| | 255265-50 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் மூர்த்திகளின் ஆலயக் கட்டடங்களை அமைத்தவர்கள்

| | |
|---|---|
| மூலமூர்த்தி (மூலஸ்தானம்)<br>நந்தி, பலிபீடம் | பொது |
| அரசடிப் பிள்ளையார் ஆலயம்<br>வீரமாகாளர் ஆலயம்<br>எழுந்தருளி மூர்த்தி | அமரர். இ. சுப்பிரமணியம் |

கோவில்ப் பிள்ளையார் — அமரர் ச சுப்பிரமணியம்

முருகன் ஆலயம் — திரு. ச. கதிர்காமத்தம்பி

தம்பத்தடிப் பிள்ளையார் — திரு வ. நகுலேஸ்வரன்

நாகதம்பிரான் ஆலயம் — திரு. தனபாலசிங்கம் முரளிதரன்

வைரவர் (சூலம்) — திருமதி வள்ளிநாயகி சிவபாதரத்தினம்

மணி, மணிக்கோபுரம் — திரு. அ. வைரவமூர்த்தி

ஒரே பார்வையில் சுருக்கமாக

| | |
|---|---|
| மொத்த வரவு | 247265-50 |
| மொத்த செலவு | 255265-50 |
| மேலதிக செலவு | 8000-00 |

கும்பாபிஷேக திருப்பணி நிதி,
விழாப் பொறுப்பாளர்கள்,
**திரு. கி. சிவபாதரத்தினம்**
**திரு. கி. சி. சிவமயம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமகள் அழுத்தகம், சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org